THE WORLD NEEDS THE WORD
IBT

ஜுன் 2025
மலர் 23, இதழ் 9

# சத்திய வார்த்தை

IBT நிறுவனர் (Late) Rev. Prof. S. பன்னீர் செல்வம்

SATHTHIYA VAARTHAI - TAMIL
இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்களின் செய்தி மலர்

ஆண்டு சந்தா
ரூ. 100/-

# மறைந்திருக்கும் ஆண்டவரை அடையாளம் கண்டு கொள்ளுங்கள்



# மறைந்திருக்கும் ஆண்டவரை அடையாளம் கண்டு கொள்ளுங்கள்

**“இந்த முட்செடி எரிந்தும் வெந்து போகவில்லை இது என்ன அற்புதம்” என்று மோசே கூறி, அதை கிட்ட நின்று (வேடிக்கை) பார்க்கும்படி அதன் அருகில் சென்றான். அந்த முட்செடியின் நடுவிலிருந்து தேவன் “மோசே, மோசே என்று கூப்பிட்டார்” (யாத். 3 : 2–4).**

மோசே ஓரேப் மலைக்கு 40 ஆண்டுகளாக பலமுறை ஆடுகளை மேய்க்கச் சென்றிருக்கிறான். அந்த மலையின் ஒவ்வொரு அங்குலமும், அடியும் அவனுக்கு நன்கு தெரியும். ஆனால், அன்றோ ஒரு விநோதமான சம்பவம் நடந்தது. மலையில், உஷ்ணத்தினால் செடி, மரங்கள் ஒன்றுக்கொன்று உரசி, தீ எரிவது ஒன்றும் ஆச்சரியம் இல்லை. ஆனால் அக்கினி எரிந்தும் அந்தச் செடி கருகவில்லை. எரிந்து சாம்பலும் ஆகவில்லை. இதுதான் அவனுக்கு ஆச்சரியம். எனவே மோசே முட்செடியின் அருகில் சென்றது, இது என்ன என்று வேடிக்கைப் பார்க்கும் நோக்கத்தோடுதான் அவன் அருகில் சென்றான். அந்த முட்செடியில் ஆண்டவர் இருப்பார் என்று அவன் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை.

ஆம்! நமது வாழ்க்கையில் கூட பல சந்தர்ப்பங்களில் ஆண்டவர் நமக்கு அருகாமையில் இருந்திருக்கிறார். பல ரூபங்களில் பல சம்பவங்களின் நடுவில் ஆண்டவர் இருந்திருக்கிறார். ஆனால் நாம், நம்மால்தான் அவரை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. ஒருவனது வாழ்க்கையில் நடக்கும் சாதாரண, அன்றாட சம்பவங்களில் ஆண்டவரை பார்க்கும் மனிதன் ஆசீர்வதிக்கப்பட்டவன். நமது வாழ்க்கையில் நடக்கும் ஒவ்வொரு சம்பவத்திலும் ஆண்டவரது கரத்தைப் பார்க்கப்பழகின மனிதன் தன் வாழ்க்கையில் நடக்கும் ஒவ்வொரு காரியத்தையும் ஆண்டவரது கரத்தில் ஒப்படைக்க சற்றும் தயங்கமாட்டான்.

நமது அன்றாட நடைமுறை வாழ்க்கையில் ஆண்டவர் நமக்கு அருகில் வந்திருக்கிறார். *ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான்...* என்ற (நீதி 19 : 17) வசனத்தில் இந்த உண்மை அடங்கியிருக்கிறது. “ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறேன்” என்று ஒரு பக்தன் பாடினான். தேவைகளோடு அலைந்து திரியும் மக்களிடத்தில் – அன்னை தெரேசா அவர்கள் – இறைவனையும் அவருக்கு தொண்டு செய்யும் அவசியத்தையும் உணர்ந்தார்கள்.

வேதத்தைப் புரட்டி நாம் வாசிப்போமானால், அநேகர் ஆண்டவருக்குப் பக்கத்தில் உரசிக்கொண்டு நின்றார்கள். ஆனால், அவர்களோ அவரை அடையாளம் கண்டு கொள்ளவில்லை; இதே தவறை நாமும் செய்து விடக்கூடாது. நமது அன்றாட வாழ்க்கையில் நமது வேலைக்குப் போகும் போதும், திரும்பும் போதும், நமது வேலைகளை செய்யும் போதும், பலதரப்பட்ட வித்தியாசமான மக்களை நாம் பார்க்கும் போதும் ஆண்டவர் எங்கேயாவது மறைந்து, ஒளிந்து கொண்டு இருந்திருப்பார். அப்படிப்பட்ட ஆண்டவரை நாம் அடையாளம் கண்டு கொள்ள பழக வேண்டும்: பயிற்சி கொள்ள வேண்டும். நாம் ஆண்டவரை ஆராதிப்பதற்கு ஆலயத்திற்கு போகிறோம். ஆலயத்தில் ஆண்டவர் பேசுவதை நாம் கேட்கிறோம். அவரை ஆராதிக்கிறோம். ஆனால் அந்த ஆராதனை முடிந்து, நாம் வீடு திரும்பும் போது, ‘‘சரி ஆண்டவரே, அடுத்த ஞாயிற்றுக்கிழமை காலையில் சந்திப்போம். அது வரை bye bye” – என்று சொல்வோமானால் அது அவ்வளவு சரியல்ல; ஏதோ ஆண்டவர் ஆலயத்தை விட்டு வெளியே வரக்கூடாது, வீட்டிற்கு வந்து நம்மை தொந்தரவு செய்யக்கூடாது என்று மறைமுகமாக நாம் கூறுவது போல் இருக்கிறது.

உண்மையாகவே நாம் ஆராதனை முடித்து விட்டு வீடு திரும்பும்போதுதான், நமது உண்மையான ஆராதனை ஆரம்பிக்கிறது - என்ற ஆழமான உண்மையை நாம் உணர வேண்டும். ஆண்டவரை எங்கும் தொழுது கொள்ளும் காலம் இது. ஆண்டவரை நமது வீட்டில், வெளியில், வேலை ஸ்தலத்தில், கடையில், பஸ்ஸில் நாம் சந்திக்க ஆயத்தமாக இருக்க வேண்டும்.

இந்த செய்தியில், நமது வாழ்க்கையின் சில பகுதிகளில் ஆண்டவர் எப்படியெல்லாம் மறைந்து காணப்படுகிறார் - அவரை நாம் எப்படி அடையாளம் கண்டு கொள்வது - அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் நாம் எப்படி நடந்து கொள்வது என்று சிந்திக்கப் போகிறோம்.

1. கடலின் மேல் அவர் நடந்து வந்த போது (மத். 14 : 26) சீஷர்கள் பேய் என்று அலறினார்கள்.

2. எம்மாவூருக்குப் போய்க் கொண்டிருந்த சீஷர்கள் (லூக். 24 : 13) அவரை அந்நியர் என்று எண்ணினார்கள்.

3. ஓரேப் மலையில் முட்செடி எரிந்த போது (யாத். 3 : 3) மோசே வேடிக்கை பார்க்கும்படி அருகில் சென்றான்.

4. கிணற்றுக்கு அருகில் சந்தித்த சமாரிய பெண் (யோ. 4 : 25) இயேசுவை மேசியா என்று....

5. உயிர்த்தெழுந்த இயேசுவை கல்லறையில் சந்தித்த மரியாள் (யோ. 20 : 14).

## *1. கடலின் மேல் நடந்து வந்த இயேசு*

இயேசு கடலின் மேல் நடந்து வருகிறதை சீஷர்கள் பார்த்து, கலக்கமடைந்து, அது ஒரு பேய் என்று எண்ணி பயத்தினால் அலறினார்கள். உடனே இயேசு, "நான் தான் பயப்பட வேண்டாம். திடன் கொள்ளுங்கள்'' என்று கூறினார் (மத். 14 : 26,27).

ஆண்டவரை, ஆண்டவராக அடையாளம் கண்டு கொள்ளாவிட்டாலும் பரவாயில்லை. ஆனால், சீஷர்கள் ஆண்டவரைப் போய் 'பேய்' என்று கூறும் அளவிற்கு அவர்களது கணிப்பு இமாலயத் தவறாக மாறுகிறது. இதற்கு முக்கிய காரணம் அவர்களுக்குள் இருந்த பயம் தான். ஒரு மனிதனுக்குள் பயம் வந்து விட்டால் அவனுக்கு வெளிச்சம் இருளாகத் தெரிகிறது. பள்ளம், மேடாக; மேடு, பள்ளமாக; கடவுள், பிசாசாக கண்களுக்குத் தெரிகிறது. இந்த முரண்பாட்டை நாம் நன்கு புரிந்து கொண்டு, ஆவன செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களையும் ஆண்டவர் பயன்படுத்தி 5000 பேர்களை போஷித்தார். இந்த அற்புதத்தின் முடிவில் மக்களையும், சீஷர்களையும் அவசர அவசரமாக படகில் அனுப்பி விட்டார். காரணம், அவர் ஜெபிக்க வேண்டிய நேரம் நெருங்கி விட்டது. அதன் பின்பு, அவர் தனிமையாக ஜெபம் பண்ண ஒரு மலையின் மேல் ஏறிப் போனார். அங்கு எவ்வளவு நேரம் ஜெபம் பண்ணினார் என்று வேதத்தில் கொடுக்கப்படவில்லை. நிச்சயமாக இரவு 9.00 மணி முதல் அதிகாலை 4.00 மணி வரை ஜெபம் பண்ணியிருப்பார் என்று நினைக்கிறேன். இந்த ஜெபத்தை முடித்து விட்டுத்தான், அவர் கடலின் மேல் நடந்து, தான் படகில் அனுப்பிய சீஷர்களை சந்திப்பதற்கு செல்கிறார். இச்சம்பவங்களுக்கு சற்று முன்பு தான் யோவான் ஸ்நானகன் கொல்லப்பட்ட செய்தியை இயேசு கேள்விப்பட்டார். இச்செய்தி இயேசுவை மன ரீதியாக அதிகமாக பாதித்திருக்க வேண்டும். இதே மத். 14-ஆம் அதிகாரத்தில் 13-ஆம் வசனத்தில் இப்படியாக வாசிக்கிறோம். யோவான் ஸ்நானகன் சிரச்சேதம் செய்யப்பட்ட செய்தியை அவரது சீஷர்கள் இயேசுவிற்கு அறிவித்தார்கள். இச்செய்தியைக் கேட்டவுடன் அவ்விடத்தை விட்டு இயேசு புறப்பட்டு வனாந்தரமான இடத்திற்கு - நிச்சயமாக ஜெபம்

பண்ணுவதற்காகப் போனார். இருப்பினும், ஜனங்கள் அவரைத் தேடி வந்த காரணத்தினால் அவர் மனதுருகி, அவர்களை சொஸ்தமாக்கும் பணியில் ஈடுபட்டார்.

13-ஆம் வசனத்தில் அவர் தொடங்கி பாதியில் விட்ட ஜெபத்தை, ஊழியத்தை முடித்து விட்டு, 23-ஆம் வசனத்தில் அவர் தொடர்கிறார். இரவு முழுவதும் ஜெபம் பண்ணினார் என்று வாசிக்கிறோம். இந்த ஜெபத்தை முடித்து விட்டு, கடல் அலைகளினால் படகில் தவித்துக் கொண்டிருக்கும் சீஷர்களை சந்திக்க அவர் வருகிறார்.

நமது வாழ்க்கையில் கடல் கொந்தளிக்கும் போது, புயல் வீசும் போது நமக்கு உதவி செய்ய ஓடி வரும் ஆண்டவரை நாம் அடையாளம் கண்டு கொள்ளத் தவறுகிறோம். நமக்கு ஒரு ஏமாற்றம் வரும் போது, நாம் தோல்வியை சந்திக்கும் போது, ஒரு மரணத்தின் மூலம் நமது வாழ்க்கையில் புயல் வீசும் போது, நமக்கு யார் ரூபத்திலாவது உதவி செய்ய நம்மை நோக்கி நடந்து வருகிறார். அவரைப் பார்த்து விட்டு நாம் “பேய்” என்று கதறுகிறோம். ஐயோ, அப்பா என்று அலறுகிறோம். இது நமது தவறு. அது பேயுமல்ல, பூதமும் அல்ல. நமது ஆண்டவர்தான் என்பதை அடையாளம் கண்டு கொள்ள பழக வேண்டும். கண்ணை கசக்கிவிட்டு நன்கு கவனித்துப் பாருங்கள்.

**நமது விசுவாசம் ஆண்டவர் மேல் பதிக்கப்பட்டிருக்கும் வரைக்கும், நமது பிரச்சனைகள் என்ற கடலின் மேல் நாம் நடக்க முடியும்.**

இதே சம்பவத்தை இன்னொரு சுவிசேஷ புத்தகத்தில் வாசிக்கும் போது, தூரத்தில் வருகிறது நமது ஆண்டவர்தான் என்று இயேசுவின் மார்பில் சாய்ந்திருந்த அவருக்கு அன்பான சீஷனாகிய யோவான் கூறுகிறார். **பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும்** (1 யோவான் 4 : 18). யோவான் இயேசுவின் மேல் அதிகமாக அன்பு செலுத்திய காரணத்தினால், இயேசு தூரமாக வந்தாலும், வருகிறவர் இயேசுதான் என்று அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது. பெண்களுக்கு தனது கணவன் எவ்வளவு தூரத்தில் வந்தாலும் எவ்வளவு கூட்டத்தில் இருந்தாலும் எளிதாக அடையாளம் கண்டு கொள்வார்கள். அது போலவே நாம் இயேசுவின் மேல் பூரண அன்பு செலுத்துவோமானால், அவர் நமக்கு முன்பாக வருவதை எளிதில் கண்டு கொள்ள முடியும்.

இதை வாசிக்கிற நீங்கள் ஒருவேளை உங்கள் வாழ்க்கைப்படகு புயலில் சிக்கி இருக்கலாம் உங்களைச் சுற்றிலும் இருள் சூழ்ந்திருக்கலாம். நீங்கள் உங்கள் வாழ்க்கையின் மூன்றாம் மணி வேளையில் இருக்கலாம், பலவித பிரச்சனைகளால் நீங்கள் சூழப்பட்டிருக்கலாம்; பயப்படாதிருங்கள். உங்கள் பிரச்சனைகளின் மேல் இயேசு நடந்து வருவதை சற்றுப் பாருங்கள். நீங்கள் எதைப் பிரச்சனையாகப் பார்க்கிறீர்களோ, அதே பிரச்சனைகளின் மேல் இயேசு வெற்றி கொண்டு நடந்து வருகிறார். இயேசு கடலின் மேல் நடந்து வருவதை எல்லா சீஷர்களும் தான் பார்த்தார்கள். ஆனால், பேதுருவிற்கு மாத்திரம் தான் – ஆண்டவர் கடலின் மேல் நடப்பாரானால் அவரது சீஷனாகிய நானும் அதே கடலின் மேல் நடக்க முடியும் – என்றதொரு சவாலான எண்ணம் வந்தது. படகில் இருந்த வேறு எந்த சீஷனுக்கும் இதுபோன்ற எண்ணம் வரவில்லை. அப்பொழுது பேதுரு இயேசுவைப் பார்த்து, “ஆண்டவரே, நானும் கடலின் மேல் நடக்கலாமா? என்று கேட்க, அதற்கு இயேசுவும், “நீ நடக்கலாம்” – என்று பச்சைக் கொடி காண்பித்தார். இதைக் கேட்ட பேதுரு, தைரியமாக படகைவிட்டு வெளியே குதித்து கடலின் மேல் நடக்க ஆரம்பித்தான்.

இதை வாசிக்கிற நீங்கள் கூட உங்கள் வாழ்க்கைப் பிரச்சனைகளின் நடுவில் சிக்கிக் கொண்டு ஒரு சில தைரியமான முடிவுகளை எடுக்க

முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கலாம். இப்பொழுது அந்த தைரியமான முடிவை நீங்கள் எடுக்கும் நேரம் வந்து விட்டது. குழம்பிக் கொண்டு, கையைப் பிசைந்து கொண்டு இருதலைக் கொள்ளி எறும்பு போல ஆற்றில் ஒரு கால், சேற்றில் ஒரு கால் - என்று தடுமாறிக் கொண்டிருக்க வேண்டாம். பேதுருவைப் போல, தைரியமாக படகை விட்டு குதித்து எழுங்கள், கடலில் குதித்து விடுங்கள்.

கடலில் குதித்த பேதுரு கொஞ்ச நேரம் சிறிது தூரம் தண்ணீரின் மேல் நடந்தான். இயேசுவைப் பார்த்து கொண்டு அவன் நடந்த போது, அவன் தண்ணீரின் மேல் நடந்தான். ஆனால், அவன் கொந்தளிக்கும் கடலையும் புயலையும் பார்க்க, ஆரம்பித்தபோது தண்ணீருக்குள் மூழ்க ஆரம்பித்தான்.

ஆம்! நமது விசுவாசம் ஆண்டவர் மேல் பதிக்கப்பட்டிருக்கும் வரைக்கும், நமது பிரச்சனைகள் என்ற கடலின் மேல் நாம் நடக்க முடியும். ஆனால் நமது நம்பிக்கை, விசுவாசம், நமது கவனம் வேறு பக்கம் திரும்பும்போது நமது பிரச்சனைகள் நம்மேல் நடக்க ஆரம்பிக்கும்; பிரச்சனைகளுக்குள் நாம் மூழ்கி விடுவோம். நம்முடைய வாழ்க்கையில் பிரச்சனைகள் எழும்போது, நாம் அந்தப் பிரச்சனைகளுக்கு அடியில் போய் சிக்கிக் கொள்ளாமல், அந்தப் பிரச்சனைகளுக்கு மேல் சென்று அதன் மேல் நடக்க நாம் பழக வேண்டும்.

### *கடலின் மேல் - பிரச்சனைகளுக்கு மேலாக - நடப்பது எப்படி?*

21-ஆம் நூற்றாண்டில் வாழும் நமக்கு ஒருவேளை தண்ணீரின் மேல் நடக்க வேண்டிய அவசியம் இருக்காது. நமது வாழ்க்கையில் பல பிரச்சனைகள் இந்த கடல் தண்ணீரைப்போல் காணப்படுகிறது. இந்த வாழ்க்கைப் பிரச்சனைகள் மேல் வெற்றி பெற்று அதை மேற்கொள்வது தான் நாம் கடலின் மேல் நடப்பதற்கு சமானம். இப்படியாக, நமது வாழ்க்கைப் பிரச்சனைகளுக்கு மேல் நடக்க நாம் ஆண்டவரால் அழைக்கப் படுகிறோம்.

நமது பிரச்சனைகளுக்கு மேலாக நடப்பது எப்படி? முதலாவது, ஒரு பிரச்சனை நமக்கு வந்துவிட்டால், அதைப்பார்த்து உடனே பயப்படக் கூடாது. இரண்டாவதாக அந்தப் பிரச்சனையிலிருந்து உங்களை விடுவித்துக் கொண்டு, வெளியே வந்து அந்தப் பிரச்சனையை ஒரு அந்நியரைப் போல அணுக வேண்டும். உண்மையிலேயே அந்தப் பிரச்சனையின் ஒரு பகுதியாக நீங்கள் இருக்கலாம். அதிலிருந்து மனரீதியாக நீங்கள் வெளியே வந்தால் தான் உங்கள் மூளை சரியாக வேலை செய்யும். அந்தப் பிரச்சனையை எப்படி அணுகலாம், எவ்வாறு தீர்வு காணலாம் என்று நீங்கள் ஆர அமர யோசிக்க முடியும்.

தாவீதை எடுத்துக் கொள்ளுங்கள் 1 சாமு. 30-ஆம் அதிகாரத்தில் அவனும் அவனது 600 போர் வீரர்களும் ஒரு பெரிய சிக்கலில் மாட்டிக் கொண்டார்கள். அவர்கள் இல்லாத சமயத்தில் கொள்ளைக் கூட்டத்தார் வந்து அவர்களது மனைவிகள், பிள்ளைகள் அனைவரையும் சிறைப்படுத்தி, வீடுகளை சூரையாடி, தீ வைத்து, எரித்து சாம்பலாக்கி விட்டு போய் விட்டார்கள். தாவீதின் எல்லா மனுஷரும் அழுது புலம்பி தலையில் மண்ணை வாரிக் கொட்டிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழலில் தாவீது என்ன செய்கிறான் என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

**பிரச்சனைகளுக்கு மேலாக நிற்கப் பழகுங்கள்.**
**பிரச்சனைகளின் காலடியில் நீங்கள் நிற்பதற்குப் பதிலாக, உங்கள் காலடியில் பிரச்சனை நிற்கட்டும்.**

தாவீது அந்த அழுது புலம்பும் கூட்டத்தை விட்டு வெளியே தூரமாக வந்து விடுகிறான். அழுது புலம்பும் கூட்டத்தாரின் நடுவில் இருக்கும் வரைக்கும் ஆக்கப்பூர்வமான எண்ணங்கள் நமது மனதில் தோன்றவே தோன்றாது. ஆனால் அதை விட்டு வெளியே வந்தவுடன் தாவீதின் மனம், "அடுத்து என்ன செய்ய வேண்டும்? வீடுகளைச் சூரையாடி, தீ வைத்த கொள்ளைக்கார கும்பலைக் கண்டு பிடித்தால்தான் மனைவி மக்களை மீட்க முடியும் - என்று அவன் மனம் சரியான திசையில் சிந்திக்கத் தொடங்குகிறது. அதன் விளைவு - ஆண்டவரிடம் ஜெபித்து - வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு போல, புறப்பட்டுச் சென்று அந்தக் கும்பலைக் கண்டு பிடித்து - எல்லோரையும் இழந்து போன எல்லாவற்றையும் மீட்டுக் கொள்கிறான். கடலின் மேல் நடக்க பேதுருவை அழைத்த இயேசு நம்மையும் கடலின் மேல் நடக்க அழைக்கிறார். நமது பிரச்சனையாகிய தண்ணீரின் மேல் நாம் நடக்க வேண்டும் இதுதான் இயேசுவோடு நாம் கடலின் மேல் நடக்கும் அனுபவத்தின் அர்த்தம்.

உங்கள் பிரச்சனைகளுக்குக் கீழே நிற்காதீர்கள். பிரச்சனைகளுக்கு மேலாக நிற்க பழகுங்கள். பிரச்சனைகளின் காலடியில் நீங்கள் நிற்பதற்கு பதிலாக உங்கள் காலடியில் பிரச்சனை நிற்கட்டும். ஒரு தாமரை தண்ணீர்களுக்கு மேல் உயரமாக நிற்பது போல, நீங்களும் உங்களது பிரச்சனைகள் என்ற தண்ணீருக்கு மேலாக நிற்க பழகுங்கள். இயேசுவை மாத்திரம் பாருங்கள்.

## 2. எம்மாவூருக்குப் போய்க் கொண்டிருந்த சீஷர்கள்

அவர்கள் பேசிக் கொண்டு போகையில், இயேசு அவர்களுடனே கூட நடந்து போனார். ஆனாலும் அவரை அறியாதபடிக்கு அவர்களுடைய கண்கள் மறைக்கப்பட்டிருந்தது (லூக். 24 :15,16).

எம்மாவூருக்குப் போய்க் கொண்டிருந்த இரண்டு சீஷர்களோடு இயேசு 3-வது நபராக சேர்ந்து கொண்டு பிரயாணம் செய்தார். மொத்தம் 7 மைல் தூரத்தில் குறைந்தது 4 மைல் தூரமாவது இயேசுவும் அவர்களோடு சேர்ந்து நடந்திருப்பார். அப்படியானால் 6 கி.மீட்டர் தூரத்தைக் கடக்க 1 மணி நேரமாவது ஆகியிருக்கும். ஒரு மணி நேரம் உயிர்த்தெழுந்த இயேசுவோடு முகமுகமாக பேசியிருக்கிறார்கள். ஆனால், ஒருவருக்குக் கூட இவர்தான் இயேசு என்று அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. அவர் பேசிய வார்த்தைகள், தோரணைகள், முகபாவனைகள் - இவைகளை வைத்துக் கொண்டு அவரை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. உண்மையாகவே இவர்கள் மந்த இருதயம் உடையவர்கள் - என்று இயேசு கடிந்து கொண்டது முற்றிலும் சரியே.

நம்முடைய வாழ்க்கைப் பயணத்தில் பல சமயங்களில் இயேசு நம்மோடு கூட பயணம் செய்திருக்கிறார். ஆனால், அவரை நாம் அடையாளம் கண்டு கொள்ள தவறி இருக்கிறோம். மனச் சோர்வு, சரீரக் களைப்பு, தோல்வி இது போன்ற பலவீனங்கள் நம்மைத் தாக்கும்போது, நம்மை உற்சாகப்படுத்துவதற்கு ஆண்டவர் நம் அருகில் பலர் மூலமாக பல ரூபத்தில் வந்திருக்கிறார். நம்மோடு பேசி இருக்கிறார். நாம் கேட்ட பல பிரசங்கங்களில் வேத வசனத்தை நமக்கு விளக்கி இருக்கிறார். நமக்குப் புரியாத பல விஷயங்களை விளக்கிச் சொல்லி இருக்கிறார். நாம்தான் அதைப் புரிந்து கொள்ள முடியாத மந்த இருதயம் உள்ளவர்களாக இருந்திருக்கிறோம்.

எம்மாவூருக்குச் சென்ற சீஷர்களோடு இயேசு நடந்து பேசிக் கொண்டு போவது போல, இந்த 21-ஆம் நூற்றாண்டில் இயேசு நம்மோடு சரீரப் பிரகாரமாக வந்து பேசமாட்டார். ஆனால், அவர் நம்மிடத்தில் சொல்ல விரும்பும் வார்த்தைகளை

வேறு யார் மூலமாவது பேசுவார். அப்படி மற்றவர்கள் மூலமாகவோ அல்லது ஒரு ஆராதனை செய்தி மூலமாகவோ – பத்திரிகை மூலமாகவோ – ஏன் சில சமயம் கழுதை மூலமாகக் கூட ஆண்டவர் பேச முடியும். ஆனால் அப்படி அவர் நம்மோடு பேசும்போது, இயேசுவை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். காதுள்ளவன் கேட்கக் கடவன் – என்ற இயேசுவின் வார்த்தையின் உண்மையுள்ள அர்த்தம் இதுதான், ஆண்டவரே. நீர் பேசும், அடியேன் கேட்கிறேன் – என்று சாமுவேலைப் போல நாம் சொல்ல வேண்டும்.

யேசபேல் ராணியின் பயமுறுத்தலினால் பயந்து போயிருந்த எலியா மனச் சோர்வினால் சூரைச் செடியின் அடியில் உட்கார்ந்திருந்தான். இதைக் கவனித்த ஆண்டவர் ஒரு தேவதூதன் மூலமாக அப்பத்தையும் தண்ணீரையும் அவனுக்குக் கொடுத்தார் (1 ராஜா. 19 :4). அதை அவன் சாப்பிட்டு விட்டு மீண்டும் படுத்துக் கொண்டான். இந்த இடத்தில் அவனது மனச் சோர்வு நீங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. காரணம், தனக்கு அப்பத்தையும் தண்ணீரையும் அனுப்பியது ஆண்டவர்தான் என்ற உண்மையை அவன் உணரத் தவறி விட்டான். எம்மாவூருக்குப் போன சீஷர்கள் தங்களுடனே பேசுவது உயிர்த்தெழுந்த இயேசுதான் – என்ற உண்மையை உணரத் தவறிவிட்டார்கள். தங்களுடனே பேசுவது உயிர்த்தெழுந்த இயேசுதான் – என்ற உண்மையை அவர்கள் அறிந்திருந்தால், அவர்களது மனச்சோர்வு மாலையில் நீங்குவதற்குப் பதிலாக மதியமே போயிருக்கும். அதுபோலத்தான் இந்த எலியாவிற்கும், தனக்கு அப்பத்தையும் தண்ணீரையும் கொடுத்தது ஆண்டவர்தான் என்று அவன் அறிந்திருந்தால் அவனது மனச்சோர்வு எப்பொழுதோ போயிருக்கும். ஆனால் சோர்வினால் அவனது மனக்கண்கள் மறைக்கப்பட்டிருந்தது.

**நம்மைச் சுற்றிலும் உள்ள தேவை நிறைந்த மக்களின் தேவைகளை சந்திக்கும்போது, நாம் ஆண்டவரின் தேவைகளை சந்திக்கின்றவர்களாக மாறுகிறோம்.**

ஆண்டவர் ஒரு மனிதனுக்கு உதவி செய்ய முற்படும் போது, அவர் தன்னைத் தானே மறைத்துக் கொண்டு, சாதாரண பாமர, ஏழை மக்கள் ரூபத்தில் தன்னை வெளிப்படுத்த விரும்புகிறார். இந்த மாதிரி கடவுள் தன்னை சாதாரண மனிதர்கள் மூலமாக வெளிப்படுத்தும் முறை பல மதங்களில் அதிகமாகக் காணப்படுகிறது. ஒரு ஏழையின் ரூபத்தில் கடவுள் தோன்றும்போது அவர்களுக்கு உதவி செய்பவர்களை கடவுள் அபரிமிதமாக ஆசீர்வதிக்கும் சம்பவங்களை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். நமது வேதத்தில் இதைப்பற்றி இப்படியாக வாசிக்கிறோம்.

நான் பசியாக இருந்தபோது எனக்கு உணவு கொடுத்தீர்கள். நான் தாகமாயிருந்த போது எனக்கு தண்ணீர் கொடுத்தீர்கள். நான் வியாதியாக இருந்த போது என்னை வந்து பார்த்து விசாரித்தீர்கள். அந்நியனாக இருந்த போது, நான் உங்கள் வீட்டில் தங்குவதற்கு இடம் கொடுத்தீர்கள் (மத். 25:35,36).

அப்பொழுது ஆண்டவரது வலது பக்கத்தில் நிற்பவர்கள் எப்பொழுது இப்படி உமக்கு உணவு கொடுத்தோம், தண்ணீர் கொடுத்தோம்? – என்று கேட்டபோது, ஆண்டவர் கொடுக்கும் பதிலை ஆழமாக சிந்தித்துப் பாருங்கள். ''இந்த சிறியோருக்கு அதாவது கவனிப்பாரற்றுக் கிடக்கும் இந்த மனித சமுதாயத்தில் உள்ள ஒருவனுக்கு நீங்கள் செய்ததை, எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே கூறுகிறேன்'' என்று பதில் உரைக்கிறார்.

நம்மைச் சுற்றிலும் உள்ள தேவை நிறைந்த மக்களின் தேவைகளை சந்திக்கும் போது, நாம் ஆண்டவரின் தேவைகளை சந்திக்கின்றவர்களாக மாறுகிறோம்.

இதை வாசிக்கிற நீங்கள் மனச்சோர்வோடு காணப்படுவீர்களானால் உங்களுடைய மனச்சோர்வை நீக்குவதற்கு ஆண்டவர் உங்களைத் தேடி வருகிறார்.

மனித சமுதாயத்தில் ஒரு மாறாத நித்திய நியமனம் ஒன்று உண்டு. அது என்ன தெரியுமா? உங்களுடைய தேவைகள் சந்திக்கப்பட வேண்டுமானால் அதற்கொரு சுலபமான வழி – உங்களைச் சுற்றிலும் உள்ள மற்ற மக்களின் தேவைகளை நீங்கள் சந்திக்க முன் வர வேண்டும். மாற்றான் பிள்ளைகளை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானாக வளரும் என்ற பழமொழியை மறக்க வேண்டாம். உங்களது பிரச்சனைகளைப் பற்றி மாத்திரமே யோசித்துக் கொண்டு உட்காராதீர்கள். தயவு செய்து மற்றவர்களது பிரச்சனைகள் என்னவென்று அறிந்து கொண்டு அவர்களுக்கு உதவி செய்ய முன் வாருங்கள்.

இதை வாசித்த பின்பு ஒரு தீர்மானம் எடுங்கள். உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு நாளும், உங்களது அன்றாட வாழ்க்கையின் பல சூழல்களில், நடவடிக்கைகளில் ஆண்டவரை யாருடைய ரூபத்திலாவது நீங்கள் சந்திப்பீர்கள். பசியோடு, வியாதியோடு, தாகத்தோடு – ஏதாவது ஒரு தேவையோடு இருப்பவரை இந்த உலகில் நீங்கள் சந்திக்கும்போது, இயேசுவை சந்திக்கிறீர்கள் – என்று நீங்கள் உணர வேண்டும், உதவ முன் வர வேண்டும்.

**என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு; அவரது இரட்சிப்பின் நிமித்தம், நீ இன்னும் அவரைத் துதிக்க வேண்டும் (சங். 42 : 11).**

### *3. சமாரியப் பெண்*

அந்த சமாரியப் பெண் இயேசுவை நோக்கி "நீங்கள் சொல்லும் எல்லாவற்றையும் கிறிஸ்து எனப்பட்ட மேசியா வரும்போது எங்களுக்குத் தெரிவிப்பார் – என்றாள். அதற்கு இயேசு, ''இவ்வளவு நேரமாக உன்னோடு பேசிக் கொண்டிருக்கிற நானே அந்த மேசியா" – என்றார் (யோ. 4 : 25, 26).

சமாரியப் பெண் – ஒரு சாதாரணப் பெண் மாத்திரமல்ல, அவளுக்கு 5 புருஷர்கள் இருந்திருக்கிறார்கள். அவள் ஒரு நடத்தை கெட்ட பெண். அப்படிப்பட்ட பெண்ணை சந்திப்பதற்காகவே இயேசு சமாரியா வழியாக வருகிறார். இயேசு சமாரியா வழியாக வர அவசியமில்லை – என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நமது வாழ்க்கையில் கூட சில சம்பவங்கள் இப்படி நடக்கிறது. இதை வாசிக்கிற நீங்கள் கூட இந்தப் பத்திரிகையிலுள்ள செய்தியை வாசிக்க வேண்டுமென்று திட்டமிடவில்லை. இருப்பினும் தற்போது இதை வாசித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

இந்த சமாரியப் பெண்ணின் வாழ்க்கை ஒரு கசப்பான கதை. அவளது குடும்ப வாழ்க்கை சிம்சோனைப் போல ஒரு படு தோல்வி. உறவும் ஒட்டும் இல்லாத ஒரு வாழ்க்கை. பிள்ளைகள், கணவன், குடும்பம் – எந்த பிடிப்பும் அவளுக்கு இல்லை. இந்த உலகத்தில் நம்மை சுற்றிலும் உள்ள உறவுகள் ரொம்ப முக்கியம்! கணவன், மனைவி, அம்மா, அப்பா, தம்பி, அண்ணன் – இதுபோன்ற உறவுகள் இருப்பதினால் தான் நமது சமுதாயம் சீராக – செம்மையாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஒரு தனிப்பட்ட மனிதன் தவறான பாதையில் போகும் போது இந்த உறவுகளும், மற்றவர்களும் அந்த மனிதனை சரிசெய்து, அவனை சமுதாயம் என்ற விண்வெளியில் சரியான வட்டத்தில் வலம் வரச்செய்கிறது. இந்த சமாரியப் பெண்ணைப் பற்றிய முழு விவரம் நமக்குக் கொடுக்கப்பட வில்லை. ஆனால் அவள் சமுதாயத்தில் தனித்து விடப்பட்டிருக்கிறாள்; மற்றவர்களால் புறக்கணிக்கப்பட்டவள் – என்ற விபரத்தை நாம்

புரிந்து கொள்ள முடியும். காரணம், அவள் தனியாக மதியம் 12 மணிக்கு தண்ணீர் மொண்டு கொள்ள வந்திருக்கிறாள்.

இந்தப் பெண் தனது குடும்ப வாழ்க்கையில் தோல்வியைச் சந்தித்திருந்தாலும், அவளது "ஆன்மீக அறிவு" கூர்மையாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது, போற்றத் தகுந்தது. அவள் இயேசுவை அடையாளம் கண்டு கொள்ளத் தவறினாலும் மேசியாவைப் பற்றி சாதாரண யூத மக்களைக் காட்டிலும் அதிகமான அறிவு இவளுக்கு இருந்தது. உண்மையில் ஆச்சர்யமாக இருக்கிறது. காரணம் அவர்கள் நின்று பேசிக் கொண்டிருந்த - கிணறு யாக்கோபுக்குச் சொந்தமானது - என்ற உண்மையை அவள் அறிந்திருந்தாள் - இரண்டாவது மேசியா வரும்போது இவைகளை எங்களுக்கு விளக்கிச் சொல்லுவார் - என்று (யோ. 4:25) அவள் கூறும் வார்த்தைகள் அவள் மேசியா வருகைக்காக காத்திருக்கிறாள் என்பதை வெளிப்படுத்துகிறது. ஆம்! இவளுக்கு அறிவு இருந்தது, அழகும் இருந்தது. ஆனால் வாழ்க்கையில் மன நிம்மதி இல்லை. இந்த உலகத்தின் ஆசாபாசங்கள், இன்பங்கள் இவளுக்கு மனநிம்மதியைக் கொடுக்க முடியவில்லை. இந்தப் பெண்ணை சந்தித்து அவளுக்கு வாழ்க்கையில் திருப்தியை அளிக்கக் கூடிய ஜீவத் தண்ணீரை கொடுப்பதற்காக இயேசு இவளைத் தேடிக் கொண்டு வந்தார். அவளுக்கு தனது ஜீவத்தண்ணீரை பருகக் கொடுத்தார். தன்னோட பேசுகிறவர் இயேசு என்று அறியாமல், பல விஷயங்களை இவள் பேசிக் கொண்டிருந்தாள். ஆனால் இவர்தான் மேசியா என்று அறிந்தவுடனே, அவள் மெய் மறந்து தான் வந்த வேலையை மறந்து விட்டு , தண்ணீர் மொள்ள கொண்டு வந்த குடத்தை கிணற்றிலேயே வைத்துவிட்டு ஊருக்குள் ஓடிப் போகிறாள். அவள் முகத்தில் ஒரு புது பொலிவு காணப்பட்டது. புது மகிழ்ச்சி காணப்பட்டது. தண்ணீர் மொள்ள வந்தவள் இரட்சிப்பைப் பெற்று திரும்பினாள். தண்ணீர் குடத்தை மறந்து கிணற்றில் வைத்து விட்டாள், ஆனால், இரட்சிப்பை குடம் குடமாக தன் உள்ளத்தில் சுமந்து கொண்டு மகிழ்ச்சியுடன் வீடு சென்றாள். அவளது தீராத தாகம் தீர்க்கப்பட்டது.

**சாதாரண சம்பவங்கள் அசாதாரண தரிசனங்களை உருவாக்க முடியும்.**

இதை வாசிக்கிற உங்களது தாகத்தையும் இன்று இயேசு தீர்க்க விரும்புகிறார். உன்னுடைய வாழ்க்கையில் நீ தனிமையை உணர்ந்து கொண்டிருக்கலாம். பல ஏமாற்றங்களை சந்தித்திருக்கக் கூடும். உன் குடும்ப வாழ்க்கையில் தோல்வியை சந்திந்திருக்கக் கூடும். இவளிடம் இயேசு திடீரென்று அவளது அந்தரங்க வாழ்க்கையைப் பற்றிய ஒரு கேள்வியைக் கேட்கிறார். அதேபோல இயேசு உன்னையும் பார்த்து சில தனிப்பட்ட கேள்வியை (Personal Question) கேட்கிறார். ''உன் கணவனை அழைத்துக் கொண்டு வா" - என்றும் அவர் கேட்கலாம். உன் வாழ்க்கைப் பிரச்சனைக்கு இயேசு இன்று ஒரு தீர்வு கொடுக்க விரும்புகிறார். மனம் திறந்து அவரோடு நீ பேச வேண்டுமென்று விரும்புகிறார்.

பண்டிகையின் கடைசி நாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று சத்தமிட்டு, "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக் கடவன். என்னை விசுவாசிக்கிறவன் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும்" என்றார் (யோ. 7:37, 38).

## 4. ஓரேப் மலையில் எரியும் முட்செடியின் அருகில் நின்ற மோசே

முட்செடி அக்கினியால் ஜ்வாலித்து எரிந்து அது கருகவில்லை அப்பொழுது மோசே, "இது என்ன ஆச்சர்யம், அற்புதம்'' என்று கூறி அதைப் பார்க்கும்படி கிட்ட வந்தான் (யாத். 3:2-4).

40 ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்பு ஆண்டவர் மோசேயோடு நேரிடையாக தொடர்பு

# IBT-இன் நிகழ்வுகள்



ஒடிஷா கோண்டாபுரி பணித்தளத்தில்
சுகவீனமுற்றவருக்கு ஜெபிக்கும்
IBT மிஷனெரி சகோ. லெமன் சின்சானி.



ஒடிஷா பரலக்காமண்டி விசுவாசி வீட்டு
ஜெபக்கூட்டத்தில் தேவ செய்தியளிக்கும் சோரா
மொழிபெயர்ப்பாளர் சகோ. கடாமண்டல்.



25.3.2025 அன்று ஸ்ரீலங்காவிலுள்ள வேடர்
மொழிபேசும் மக்களைச் சந்தித்த IBT பணித்தள
இயக்குநர் திரு. சாமுவேல் ஞானதாஸ் அவர்கள்.



31.3.2025 அன்று சென்னை, கடம்பத்தூர்,
ஷாலோம் சபையில் நடைபெற்ற வாலிபர் கூடுகையில்
தேவ செய்தியளிக்கும் திரு. ராஜகுமார் அவர்கள்.



31.3.2025 அன்று சென்னை, கடம்பத்தூர்,
ஷாலோம் சபையில் நடைபெற்ற
வாலிபர் கூடுகையில் நடந்த குறுநாடகம்.



27.4.2025 அன்று மதுரை புனித ஜார்ஜ் சபையில்
நடைபெற்ற மிஷனெரிகள் கூடுகையில் IBT ஊழிய
விளக்கம் கொடுக்கும் IBT-இன் செயலர்
திரு. வரமணிராஜ் அவர்கள்.

# IBT-இன் நிகழ்வுகள்



2025, ஏப்ரல் 4,5,6 தேதிகளில் மோப்பேரிபாளையம் CSI சபையில் நடந்த லெந்துகாலக் கூட்டங்களில் தேவ செய்தியளிக்கும் திரு. ஈஸ்டர் ராஜ் அவர்கள்.



மோப்பேரிபாளையம், சிஎஸ்ஐ சபையில் நடந்த லெந்துகாலக் கூட்டங்களில் IBT ஊழிய விளக்கமளிக்கும் திரு. M. ஜான் வில்லியம் அவர்கள்.



27.4.2025 அன்று கோவை, போத்தனூர், CSI சபையில் தேவ செய்தியளிக்கும் TELC முன்னாள் பேராயர் Rt. Rev. எட்வின் ஜெயக்குமார் ஐயா அவர்கள்.



1.5.2025 அன்று சென்னை, Salvation Army Social Service Centre-இல் குடும்பக் கூடுகையில் சென்னையில் நடந்து வரும் IBT ஊழியத்தை விளக்கும் பிரதிநிதி திரு. பிரபு அவர்கள்.



1.5.2025 குடும்பக் கூடுகையில் தேவ செய்தியளிக்கும் Pr. ராஜு அவர்கள்.



1.5.2025 குடும்பக் கூடுகையில் தேவ செய்தியளித்த Pr. ராஜு அவர்களுக்கு பரிசு வழங்கும் IBT தலைவர் திரு. ஜெபஸ் செல்வின் அவர்கள்.

கொள்கிறார். அவனது கவனத்தைக் கவருவதற்கு ஆண்டவர் ஒரு முட்செடியை தெரிந்தெடுத்து அதில் அக்கினியை இறக்கினார்.

வேடிக்கை பார்ப்பது மனிதனுடைய இயல்பு. இந்த உலகத்தில் நடக்கிற பல சம்பவங்களை நாம் அன்றாட வாழ்க்கையில் வேடிக்கை பார்க்கிறோம். அதுபோலத்தான் இந்த மோசேயும் வேடிக்கை பார்ப்பதற்காக அந்த முட்செடியின் அருகில் சென்றான். ஆனால், அந்த வேடிக்கைக் காட்சியின் மையத்தில் ஆண்டவர் இருந்ததை அவன் கண்டபோது, அவனுக்கு தூக்கி வாரிப்போட்டது. ஆண்டவர் அவனோடு பேசி, ஒரு மாபெரும் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்தார். அடுத்து வரும் 40 ஆண்டுகள் அவன் என்ன செய்ய வேண்டும; இஸ்ரவேல் மக்களை எகிப்து தேசத்து பார்வோனின் இரும்புப் பிடியிலிருந்து எப்படி மீட்பது என்ற மீட்பின் திட்டத்தை அன்று ஆண்டவர் வெளிப்படுத்தினார்.

இதை வாசிக்கிற நமது வாழ்க்கையில் கூட சில சமயம் தெருவில் நின்று சில காட்சிகளை வேடிக்கைப் பார்க்கிறோம். ஆனால் அப்படிப்பட்ட வேடிக்கைக் காட்சிகள் மூலமாகக் கூட ஆண்டவர் உங்களையும் என்னையும் ஒரு மாபெரும் இரட்சிப்பின் பணிக்காக அழைக்க முடியும். உலக சரித்திரத்தையும், சபையின் சரித்திரத்தையும் நாம் வாசித்துப் பார்ப்போமானால், அங்கு ஒரு சாதாரண வேடிக்கையான ஒரு சிறு சம்பவத்தின் மூலமாகத்தான் பலர் பெரிய தரிசனங்களைப் பெற்று உலக சரித்திரம் படைத்திருக்கிறார்கள். ஒரு பழம் மரத்திலிருந்து கீழே விழுவதை வேடிக்கையாக பார்த்த நியூட்டன், பூமியின் புவிஈர்ப்புச் சக்தியைக் கண்டு பிடித்தார். ஒரு சாதாரண பிணத்தை அடக்கம் செய்ததற்காக எடுத்துச்சென்ற இறுதி ஊர்வலத்தைப் பார்த்த கபிலவஸ்து இளவரசன்.. போதிமரத்தின் அடியில் ஞானம் பெற்று புத்த மதத்தை ஸ்தாபித்தான். ஒரு தெருவில் அனாதையாகக் கிடந்த ஒரு பெண்ணின் அவல நிலையைப் பார்த்து விட்டு Bob Pears - என்ற வாலிபன் World Vision என்ற ஊழியத்தை தொடங்கினார். சாதாரண சம்பவங்கள் அசாதாரண தரிசனங்களை உருவாக்க முடியும். கண்ணுள்ளவன் பார்க்கக் கடவன். உங்களையும் ஆண்டவர் ஒரு மாபெரும் பணிக்காக மிஷனெரி பணிக்காக அழைக்கிறார்.

யாரை நான் அனுப்புவேன். யார் நமது காரியமாகப் போவான் என்று உரைக்கிற ஆண்டவரது சத்தத்தைக் கேட்டேன். அதற்கு ஏசாயா தீர்க்கதரிசி, **“இதோ அடியேன் இருக்கிறேன், என்னை அனுப்பும்”** என்றார் (ஏசா. 6 : 8).

## *5. உயிர்தெழுந்த இயேசுவை சந்தித்த மரியாள்*

இயேசுவின் சரீரத்தை யாரோ எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள் என்று எண்ணி, மரியாள் கல்லறைக்கு வெளியே நின்று அழுது கொண்டிருந்தாள். அவள் பின்னால் திரும்பிப் பார்த்த போது, இயேசு நிற்கிறதை கண்டாள். ஆனாலும், அவர் தான் இயேசு என்று அறியாதிருந்தாள் (யோ. 20 : 13-14).

இயேசு தெரிந்தெடுத்த 12 சீஷர்களில் ஒருவர் கூட பெண்கள் இல்லை - இதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. ஆனால் அநேக பெண்கள் இயேசுவின் சீஷீகளாக இருந்தார்கள். அவர்களில் இந்த மகதலேனா மரியாள் - மிக விசேஷமானவள். பண வசதி படைத்தவள். இயேசுவோடு சில சமயம் சென்றவள். பல சீஷர்களின் உணவு, உறைவிடம் - இவற்றை ஒழுங்கு செய்த ஒரு தியாகப் பெண் - இயேசு சிலுவையில் அறையப்பட்ட போது அங்கு கடைசி வரை நின்றவள். இயேசுவின் கல்லறைக்கு முதன் முதலில் வந்தவள். Last at the cross and first at the tomb. இவளிடமிருந்து 7 பிசாசுகளை இயேசு வெளியே துரத்தியிருக்கிறார். அதற்கு நன்றி கடன் செய்ய கடமைப்பட்டவள்.

இவளும் இயேசுவை அடையாளம் கண்டு கொள்ள முடியாமல் தவித்தாள், தடுமாறினாள்

காரணம் என்ன? துக்கம். இயேசு கைது செய்யப்பட்டது, நியாயம் விசாரிக்கப்பட்டது – இறுதியில் சிலுவையிலறையப்பட்டது – இவை அனைத்தும் இவளை அதிகமாக பாதித்திருக்க வேண்டும். துக்கம் கண்ணீரை வரவழைக்கும்; அந்தக் கண்ணீர் நமது கண்களை மறைத்து விடுகிறது.

இதை வாசிக்கிற உங்களது வாழ்க்கையில் கூட சிலரது மரணம் – உங்களை அதிகமாக பாதித்திருக்கலாம். சில துக்கமான சம்பவங்கள் உங்களை நிலைகுலையச் செய்திருக்கலாம். நீங்கள் தற்சமயம் கண்கலங்கி நின்று கொண்டிருக்கலாம். அதனால்தான் உங்களுக்கு முன்பாக நிற்கும் உயிர்த்தெழுந்த இயேசுவை உங்களால் அடையாளம் கண்டு கொள்ள முடியாமல் நீங்களும் தடுமாறுகிறீர்கள். “மரியாளே” என்று இயேசு அவளது பெயரைச் சொல்லி அழைத்த போது – என் ஆடுகள் என் சத்தத்தைக் கேட்கும் – என்ற வசனத்தின்படி உடனே மரியாள், போதகரே! என்று மகிழ்ச்சியுடன் பதில் கொடுக்கிறாள்.

இதை வாசிக்கிற உங்களையும் கூட இயேசு பெயரைச் சொல்லி கூப்பிடுகிறார். நீங்களும், “இயேசுவே” என்று கூற மாட்டீர்களா?

துக்கமுகமாய் இருந்த மார்ட்டின் லூத்தரை அவரது மனைவி கவனித்து விட்டு, ‘‘இயேசு உயிர்த்தெழவேயில்லை” என்று கூறினார்களாம்.” கோபமடைந்த மார்ட்டின் லூத்தர் ‘‘என்ன உளறுகிறாய் இயேசு உயிர்த்தெழுந்தார்” என்று கூற, அதற்கு அவரது மனைவி ‘‘உங்கள் முகத்தைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லை” என்று பதில் கொடுத்தாராம். அப்பொழுது தான் மார்ட்டின் லூத்தர் தனது தவறை உணர்ந்தாராம்.

இதை வாசிக்கிற உங்கள் முகத்தையும் அடிக்கடி கண்ணாடியில் பார்த்து, ‘‘இயேசு உயிர்த்தெழுந்தாரா?’’ என்று சிந்தனை பண்ணுங்கள். உங்களது அன்றாட வாழ்க்கையில் மறைந்திருக்கும் இயேசுவை அடையாளம் கண்டு கொள்ளுங்கள். கடலின் மேல் நடந்து வரும் இயேசுவைப் பேய் என்று கருதி அலறாதீர்கள். அவர் நமது ஆண்டவர். உங்கள் பிரச்சனை–களினால் மூழ்கடிக்கப்படாமல், அதற்கு மேலாக நடக்கப் பழகுங்கள். நீங்கள் சோர்ந்து போன வேளைகளில் எம்மாவூருக்குப் போன சீஷர்களோடு இயேசு நடந்து போனது போல உங்களோடும் இயேசு – யார் ரூபத்திலாவது – வந்து பேசும் போது அவரை அடையாளம் கண்டு கொள்ளுங்கள். சோர்ந்துபோன உங்கள் இருதயம் கொளுந்து விட்டு எரியட்டும். மூன்றாவதாக, வாழ்க்கையில் விரக்தியோடு எந்த ஒரு பிடிப்பும் இல்லாமல் இருக்கும் உங்களோடு – சமாரியப் பெண்ணோடு பேசுவதற்கு மெனக்கெட்டு இயேசு வந்தது போல உங்களது தாகத்தையும் போக்குவதற்கு இயேசு உங்கள் அருகில் வந்திருக்கிறார். ஜீவத் தண்ணீரைப் பருகுங்கள். நான்காவதாக, வேடிக்கை பார்க்கச் சென்ற மோசேக்கு இஸ்ரவேல் மக்களை மீட்கும் மாபெரும் உத்திரவாதத்தை ஆண்டவர் அளித்தது போல, உங்களுக்கும் ஒரு பெரிய பொறுப்பைக் கொடுக்க விரும்புகிறார். சாக்கு போக்குச் சொல்லாமல் ஆண்டவர் கொடுக்கும் பொறுப்பை சந்தோஷமாக தயங்காமல் ஏற்றுக் கொள்ளுங்கள். கடைசியாக, உயிர்த்தெழுந்த இயேசுவை தோட்டக்காரனாக தவறாக புரிந்து கொள்ள வேண்டாம். உங்கள் கவலையையும், கண்ணீரையும் போக்குவதற்கு உயிர்த்தெழுந்த இயேசு உங்கள் முன் நிற்கிறார். உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறட்டும்.

அப்பொழுது அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு இயேசுவை அவர்கள் அறிந்து கொண்டார்கள். அப்பொழுது, ‘‘*வழியிலே அவர் நம்முடனே பேசி – வேத வாக்கியங்களை நமக்கு விளக்கிச் சொல்லிய போது நம்முடைய இருதயம் நமக்குள் கொழுந்து விட்டு எரிந்ததல்லவா*’’ என்றார்கள்.

**இச்செய்தி Rev. Prof. S. பன்னீர் செல்வம் அவர்களால் எழுதப்பட்டு, 2006 மே மாத இதழில் வெளியிடப்பட்டது.**

# ஆசிரியர் மடல்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளுக்கு சத்திய வார்த்தை பத்திரிகையின் சார்பாக எங்கள் அன்பின் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*"ஆகையால் நீங்கள் எருசலேமையும் விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேற காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்" (அப். 1:5).*

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு கடைசியாக இந்த உலகத்தை விட்டுப் போகும் பொழுது, சீஷர்களை நோக்கி, நீங்கள் வேறு எங்கும் செல்லாமல் பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேற எருசலேமில் காத்திருங்கள் என்றார். 50-வது நாளான பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள். கடைசி நாளில் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்று யோவேலினால் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. கர்த்தர் எந்த ஒரு ஆசீர்வாதத்தையும் தரும் முன்பு, அது ஆவிக்குரிய அல்லது இந்த பூமிக்குரிய ஆசீர்வாதமானாலும், கர்த்தர் குறித்த நாள் வரை நாம் பொறுமையோடு காத்திருக்கும் பொழுது தான் அதை பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த நவீன உலகத்திலே யாரும் எந்தக் காரியத்திலும் காத்திருக்க விரும்புவதில்லை. எந்தக் காரியமானாலும் அல்லது நன்மையானாலும் உடனடியாகப் பெற்றுக்கொள்ள விரும்புகிறார்கள். கர்த்தருடைய சமூகத்தில் வந்தவுடன் உடனடியாக எல்லா காரியமும் வாய்க்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். காரியம் வாய்க்க தாமதமாகும் போது அவர்களது விசுவாசமும், தேவ பக்தியும் குறைந்து போகிறது. எந்த ஆசீர்வாதமும் உடனடியாக கிடைத்தால் அதற்கு பெரியதாக மதிப்பு இருக்காது.

சாலொமோன் எந்தவிதமான சிரமமும் இல்லாமல் எளிதாக இஸ்ரவேலுக்கு ராஜாவானான். அதைப்போல கர்த்தர் கொடுத்த அந்த மேன்மையை எண்ணாமல், எளிதாக பாவத்திலே விழுந்து, கர்த்தருக்கு பிரியம் இல்லாததைச் செய்து, தனது சந்ததியின் ஆசீர்வாதத்தை இழந்தான். அவனுடைய குமாரரின் நாட்களில் ராஜ்யம் இரண்டாக உடைக்கப்பட்டது. ஆனால், தாவீது ஆடு மேய்ப்பதிலிருந்து அரியணை ஏறும் வரை, அநேக போராட்டங்கள், பிரச்சனைகள், வழியாக கர்த்தருடன் கடைசி வரை பயணித்தான். சாமுவேல் தாவீதை ராஜாவாக அபிஷேகம் பண்ணினவுடன், தாவீது உடனடியாக சிங்காசனத்தில் ராஜாவாக அமரவில்லை. அநேக ஆண்டுகளுக்குப் பிறகு சமஸ்த இஸ்ரவேலுக்கு கர்த்தர் தாவீதை ராஜாவாக்கினார். நமக்கு கொடுக்கப்பட்ட வாக்குத் தத்தங்களும் உடனடியாக நம் வாழ்வில் நிறைவேறாது. சில வாரங்கள், மாதங்கள் அல்லது சில வருடங்கள் கூட ஆகலாம்.

*"நீ கர்த்தருக்குக் காத்திருந்து, அவருடைய வழியைக் கைக்கொள்; அப்பொழுது நீ பூமியைச் சுதந்தரித்துக் கொள்வதற்கு அவர் உன்னை உயர்த்துவார்" (சங். 37 : 34)* என்ற வசனத்தின்படி கர்த்தருக்குக் காத்திருந்து, ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள நம்மை அர்ப்பணிப்போம்.

கடந்த ஏப்ரல் மாதம் 4, 5 தேதிகளில் கோவை மோப்பேரிபாளையம் CSI சபை லெந்து காலக் கூட்டங்களிலும், 6-ஆம் தேதி காலை ஆராதனையிலும் திரு. ஈஸ்டர் ராஜ் அவர்கள் தேவ செய்தியும், சகோ. M. ஜான் வில்லியம் அவர்கள் IBT ஊழிய விளக்கமும் கொடுத்தார்கள். இதே மாதம் 5, 6 தேதிகளில் கோவை சிறுமுகையில் உள்ள CSI ஆலயத்தில் லெந்து காலக் கூட்டத்திலும், 6-ஆம் தேதி காலை ஆராதனையிலும் திரு. S. ராஜ சேகர்

அவர்கள் தேவ செய்தி அளித்தார். IBT ஊழிய விளக்கத்தை சகோ. ராபர்ட் மற்றும் சகோ. எஸ்ரா காலேப் இருவரும் கொடுத்தார்கள். இதே மாதம் 15-ஆம் தேதியன்று கோவை N.G.G.O. TELC ஆலயத்தில் திரு. எஸ். தீமோத்தி அவர்கள் ஊழிய விளக்கமும், தேவ செய்தியும் கொடுத்தார். இதே மாதம் 27-ஆம் தேதியன்று கோவை, போத்தனூரில் உள்ள CSI Union Church-இல் காலை ஆராதனையில் TELC முன்னாள் பேராயர் Rt. Rev. எட்வின் ஜெயக்குமார் ஐயா அவர்கள் தேவ செய்தியும், திரு. M. ஜான் வில்லியம் அவர்கள் IBT ஊழிய விளக்கமும் அளித்தார்கள். மேலே கூறப்பட்ட நான்கு சபைகளிலும் IBT ஊழியத்திற்கு சந்தர்ப்பமும், காணிக்கையும் கொடுத்து அன்பான வரவேற்பையும் தந்த சபை ஆயர்கள், செயலர், பொருளர், மற்றும் பங்கு பெற்ற சபை மக்கள் அனைவருக்கும் IBT நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

கடந்த மே மாதம் 1-ஆம் தேதி மாலையில் சென்னையில் உள்ள “சால்வேஷன் ஆர்மி” வளாகத்தில் IBT-இன் குடும்பக் கூடுகை சிறப்பாக நடந்தது. சென்னையிலிருந்து அதிகமானவர்களும், IBT பிரதிநிதிகள், சிவகாசி, ஈரோடு, கோவை மற்றும் சென்னையிலிருந்தும், ஒடிஷாவிலிருந்து மிஷனெரியும், திருச்சியிலிருந்து சௌராஷ்ட்ரா மொழிபெயர்ப்பாளர்களும் இங்கு வந்து பங்கு பெற்றார்கள். ஊரப்பாக்கத்தில் உள்ள புனித தாமஸ் இவான்ஜிலிகல் சபையின் போதகர் Rev. ராஜு அவர்கள் தேவ செய்தி அளித்தார். சிறப்புப் பாடல்கள், சிறப்பு நிகழ்ச்சிகள், வேதாகம மொழிபெயர்ப்புப் பணியின் ஆரம்ப கால முதல் தற்போது வரை உள்ள விளக்கங்கள், மொழிபெயர்ப்பாளர்களின் சாட்சி ஆகியவை முக்கியமான நிகழ்ச்சிகளாகும். பங்கு பெற்றவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாகவும், ஊழிய பாரத்தை அளிப்பதாகவும் அமைந்ததற்காக கர்த்தரைத் துதிக்கிறோம்.

IBT ஊழியம் விரிவுபடுத்தப்படவும், இந்த ஊழியம் அறியப்படாத இடங்களில் முன்னேற்ற கூட்டங்கள் நடத்தப்பட்டு, ஊழியம் பலருக்கு அறியப்படவும், அர்ப்பணிப்புள்ள வாலிபர்கள் இந்த ஊழியத்தில் இணைந்து தேவ நாமம் மகிமைப்படவும், உங்கள் அனுதின ஜெபத்தில் ஜெபிக்க மறவாதீர்கள்.

கர்த்தர் உங்களையும், உங்கள் குடும்பத்தினர் அனைவரையும் எல்லாத் தீமைக்கும் விலக்கி, நன்மையால் ஆசீர்வதிக்க ஜெபிக்கிறோம்.

ஷாலோம்!

கர்த்தரின் பணியில்,<br>
உங்கள் சகோதரன்<br>
*K. ஜெய்சிங்*


# எமது தரிசனமும், எமது பணியும்

**<u>எமது தரிசனம் :</u> “இதுவரை மொழி பெயர்க்கப்படாத அனைத்து இந்திய மொழிகளிலும் வேதாகமம் மொழி பெயர்க்கப்பட்டு ஒவ்வொரு சமூகமும் தங்களது தாய்மொழியில் கடவுளுடைய வார்த்தைகளை கிடைக்கும்படி செய்வதே”**

**<u>எமது பணி :</u>** கடவுளுடைய வார்த்தையை, இதுவரை வேதாகமம் இல்லாத அனைத்து இந்திய மொழிகளில் மொழிபெயர்த்து, அச்சிட்டு, போதிப்பது.

மொழிவாரியாக இந்தியாவின் அனைத்துப் பகுதிகளுக்கும் வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் / மிஷனெரிகளை அனுப்புதல் மற்றும் ஒவ்வொரு மொழிக்கும் “ஒரு வேதாகம மொழிபெயர்ப்பாளர் குழுவை” அமைத்து அனுப்புதல்.

# IBT நிறுவனத் தலைவர் Rev. Prof. S. பன்னீர் செல்வம் அவர்களின் 12-ஆம் ஆண்டு நினைவு நாள் - 02.06.2025




*“கர்த்தாவே உமது வசனத்தின்படி*
*உமது அடியேனை நன்றாய் நடத்தினீர்”*

IBT ஊழியத்தின் நிறுவனத் தலைவர் Rev. Prof. S. பன்னீர் செல்வம் அவர்களுக்கு கர்த்தர் கொடுத்த தரிசனத்தின்படி அவரால் 1978-ஆம் ஆண்டு “இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள்” என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட ஊழியத்தின் மூலமாக இதுவரை 2 மொழிகளில் வேதாகமம், 15 மொழிகளில் புதிய ஏற்பாடு, 8 மொழிகளில் சங்கீதம் நீதிமொழிகள், 37 மொழிகளில் 69 நற்செய்தி நூல்கள் வெளியிடப்பட்டு, அந்தந்த மொழிபேசும் மக்களுக்கு விநியோகித்ததன் பலனாக பல்லாயிரக்கணக்கான மக்கள் கர்த்தருக்குள் வாழவும், அறியாதவர்கள் அறிந்து ஏற்றுக் கொள்ளவும் ஏதுவானது. மட்டுமின்றி, அவரால் எழுதப்பட்ட பல இலக்கியப் புத்தகங்களை வாங்கிப் படித்தவர்களும் சத்தியத்தை நன்கு அறிந்து கர்த்தருக்குள் வாழ பயனளித்துள்ளது. இன்றுவரை 4 மொழிகளில் வெளிவரும் “சத்திய வார்த்தை” பத்திரிகையும் ஆன்மீக வாழ்க்கைக்கு பெரிதும் உதவிகரமாக இருக்கிறது. மேலும் மிஷனெரிப் பணி மற்றும் சமூகப்பணிகளின் மூலமாகவும் பயனடைந்து வரும் மக்கள் அநேகர். இவ்விதமாக திரு. பன்னீர் செல்வம் ஐயா மூலமாக ஆரம்பிக்கப்பட்ட இவ்வூழியத்திற்கு பல நல்ல உள்ளங்கள், ஜெபத்தினாலும், காணிக்கையினாலும் உதவி புரிவதோடு, தன்னார்வமாய் இவ்வூழியத்தில் இணைந்து கர்த்தரின் நாமம் மகிமைக்காக உழைத்து வருவது, IBT ஊழிய நிறுவனத் தலைவர் அவர்களின் அர்ப்பணிப்பான, கடுமையான உழைப்பினாலும், ஒவ்வொரு செயலையும் ஞானத்துடனும், விவேகத்துடனும், தேவ நாமம் மகிமைக்காக மாத்திரமே செய்த ஒப்பில்லாப் பணிக்கு கர்த்தர் கொடுத்த ஆசீர்வாதமேயாகும்.

# உலகச் செய்திகள்

1. காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் கடந்த ஏப்ரல் மாதம் 22-ஆம் தேதி பாகிஸ்தானில் செயல்பட்டு வரும் பயங்கரவாதிகளின் கொடூர தாக்குதலுக்கு பதிலடியாக, இந்தியாவின் முப்படைகள் பாகிஸ்தான் பயங்கரவாதிகளின் முகாம்கள் மீது தாக்குதலை 7.5.2025 அன்று நடத்தியது.
2. ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான போப் பிரான்சிஸ், வயது 88, உடல் நலக்குறைவு காரணமாக ஏப்ரல் 21-ஆம் தேதி காலமானார்.
3. உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் பபுதா, 10 மீட்டர் ஏர் ரைஃபிள் இறுதிச் சுற்றில் அவர் 252.3 புள்ளிகளுடன் 2-ஆம் இடம் பிடித்து வெள்ளிப் பதக்கம் வென்றார்.
4. மார்க் கார்னி கனடாவின் 24-வது பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டு, 2025 மார்ச் மாதத்தில் பிரதமராக பதவியேற்றார்.
5. ஜெர்மனியின் புதிய பிரதமராக ஃப்ரீரிக் மேர்ஸ் 6.5.2025 அன்று தேர்ந்தெடுக்கப்பட்டார்.

# பணித்தளச் செய்திகள்

*<u>மிஷனெரி : சகோ. இஸ்ரேல் எட்லா</u>*
*<u>பணித்தளம் : சந்தோஷ்பூர் (ஒடிஷா)</u>*

தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

கர்த்தரின் பெரிதான கிருபையால் கடந்த மாதம் மிஷனெரிப் பணிக்காக தெஷியா, மிர்கான் மொழி பேசும் மக்கள் வசிக்கும் கிராமங்களுக்குச் சென்று மிஷனெரி ஊழியம் செய்தேன்.

இப்பணிக்காக நங்கநால், மாலி அட்டிகான், கோண்டாபுரி, போடோமசிகான், சந்தோஷ்பூர் ஆகிய கிராமங்களுக்குச் சென்று நற்செய்தி அறிவித்து, அவர்களுக்காக ஜெபித்து வந்தேன்.

பணித்தள இயக்குநர் இங்கு வந்த போது Staff மீட்டிங் ஏற்பாடு செய்தார். அதில் அவர் முக்கியப்படுத்தி கூறியது, சபை மக்களுக்கு எழுத்தறிவுப் பணி செய்வதும், தெஷியா, மிர்கான் மொழி வேதாகமத்தை வாசிக்க கற்றுக் கொடுப்பதும் முக்கிய பணியாக இருக்க வேண்டும் என்பது. இந்த மொழிகளை நான் 3 மாதத்திற்குள் நன்கு கற்று, இம்மொழிகளிலேயே தேவ செய்தியும் கொடுக்க வேண்டும் என்று கூறினார். ஒடியா மொழி வேதாகமத்தை பயன்படுத்தக் கூடாது என்றும் கூறினார். சந்தோஷ்பூர், நங்கநால் சபைகளில் மிஷனெரி பணிகளைச் செய்தோம்.

ஞாயிறு ஆராதனை, உபவாசக் கூட்டம் மற்றும் சாம்பல் புதன்கிழமை ஆராதனையும் நடத்தப்பட்டன. இதில் IBT மூலமாக செய்யப்படும் பணிகள், மொழிபெயர்ப்புப் பணிகள், அடுத்த லோகோஸ் முகாமில், தெஷியா, மிர்கான், கலகாண்டியா மொழிகளில் முழு வேதாகமம் வெளியிடுவதற்காகவும், பாப்பன்பள்ளி சிறுவர் இல்லம் தடையின்றி நடைபெறவும் ஜெபம் ஏறெடுக்கப்பட்டன.

கோண்டாபுரியில் வசித்து வரும் திரு. சாம்சன் கமல் மற்றும் IBT ஒருங்கிணைப்பாளர் திரு. கேசப் மிர்கான் வீடுகளில் வீட்டு ஜெபக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. தேவ செய்தியும் அவர்கள் குடும்ப பிரச்சனைகளுக்காகவும் ஜெபம் ஏறெடுக்கப்பட்டன. போடோமசிகானில் மிஷனெரிகள் மொழிபெயர்ப்பாளர்களின் கூடுகை நடத்தப்பட்டு, சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. என் மிஷனெரிப் பணி மற்றும் என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*<u>முன்னேற்றப் பணியாளர் :</u>*
*<u>சகோ. T.K. கோபாலன்</u>*
*<u>பணித்தளம் : கோட்டயம் (கேரளா)</u>*

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!

கர்த்தரின் கிருபையால் கடந்த மாதம் முன்னேற்றப் பணிக்காக கோட்டயம், பல்லம், வலத்தம், பால்க்கீல், அமரா, வக்கத்தம், பம்பாடி, பனிமுட்டம், கரமூவிலே, மங்கரம், கைத்தமட்டம், வடவித்தூர், புதுப்பள்ளி, நெடுமாவி ஆகிய இடங்களுக்குச் சென்று IBT தாங்குநர்களைச் சந்தித்து, காணிக்கைப் பெற்று, அவர்களின் பிரச்சனைகளுக்காக ஜெபித்து வந்தேன். என் முன்னேற்றப் பணிக்காகவும், சுகவீனமாய் இருக்கும் என் மனைவிக்கும் கர்த்தர் பூரண சுகம் கொடுக்கவும் ஜெபியுங்கள்.

----------•----------

*<u>மொழிபெயர்ப்பாளர் :</u>*
*<u>சகோ. அசரியா மாதுரி</u>*
*<u>மொழி : கோயா</u>*
*<u>பணித்தளம் : பொடியா (ஒடிஷா)</u>*

கர்த்தருக்கு துதி உண்டாவதாக!

கடந்த மாதம் மொழிபெயர்ப்புப் பணியில் தெலுங்கு மொழியிலுள்ள வேதாகமத்தில் தேவைப்படும் இடங்களில் புகைப்படங்கள் போடப்பட்டுள்ளன. மிஷனெரிப் பணிக்காக

மக்சிகுடா, மோட்டமகுடா, தமர்குடா, அனந்தப்பள்ளி மற்றும் சோடிக்குடா ஆகிய கிராமங்களுக்குச் சென்று, நற்செய்தி அறிவித்து, ஜெபித்தேன்.

*சாட்சி :* அந்தப்பள்ளி கிராமத்தில் வசித்து வரும் என் மூத்த சகோதரன் திரு. மேத்யூ (வயது 65) என்பவருக்கு தண்ணீர் அருந்தவும், உணவு உண்ணவும் முடியாத நிலை ஏற்பட்டது. இங்குள்ள டாக்டர் மற்றும் பெரிய மருத்துவமனையிலும் சிகிச்சை கொடுக்க முடியாமல் விசாகப்பட்டினத்திற்கு போகச் சொல்லி விட்டார்கள். பின் அங்கு சென்று ஸ்கேன் செய்ததில், அதிக ரத்த அழுத்தம் காரணமாக மூளை பாதிப்பு என்று கண்டறிந்து 15 நாட்கள் சிகிச்சை கொடுக்கப்பட்டு, குழாய் மூலம் உணவு செலுத்தப்பட்டது. அனைவரின் ஜெபத்தினால் தற்போது நன்கு குணமடைந்து சாப்பிடும் நிலைக்கு வந்துள்ளார். மிகுந்த ஆபத்தான நிலையில் இருந்த அவருக்கு இம்மட்டும் சுகம் கொடுத்த தேவனுக்கு ஸ்தோத்திரங்கள்! என் மொழிபெயர்ப்புப் பணிக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

### *முன்னேற்றப் பணியாளர்கள் :*<br>*சகோதரி. எலிசபெத்*<br>*பணித்தளம் : கூடலூர் (தமிழ்நாடு)*

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

கடந்த மாதம் முன்னேற்றப் பணியை ஜெபத்துடன் ஆரம்பித்தோம். பனியா மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட புத்தகங்களை பனியா காலனி, காட்டு நாயக்கர் காலனி ஆகிய இடங்களில் உள்ள செருமுள்ளி, குச்சிமுச்சி, 4-வது மைல், மேபீல்ட், தேவன் எஸ்டேட் 3-வது டிவிஷன், நிலக்கோட்டை, கவண்டங்கொள்ளி, போஸ்பரா ஆகிய கிராமங்களில் விநியோகித்து நற்செய்தியைக் கூறினோம். மேலும் IBT பங்காளர்கள் மற்றும் தாங்குநர்களைச் சந்திப்பதற்காக, புஷ்பகிரி, மைக்காம் பவுண்ட், கல்குவாரி, ஓவேலி ரோடு, VOC நகர் மற்றும் கூடலூர் ஆகிய இடங்களிலும், பந்தலூர், தேவாலா, ஹெல்த் கேம்ப், காலம்புலா, செவிடிப்பேட்டை, சீயோன்ஹில், புத்தூர்வயல், ஜி.பி. காலனி ரோடு, நடுகூடலூர் ஆகிய கிராமங்களில் IBT பங்காளர்களிடம் சென்று, காணிக்கைப் பெற்று அவர்களின் குடும்பத்திற்காக ஜெபித்து வந்தோம். எங்கள் முன்னேற்றப் பணி மற்றும் எங்கள் குடும்பத்திற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

### *மிஷனெரி : K. லெமன் சின்சானி*<br>*பணித்தளம் : கோண்டாபுரி (ஒடிஷா)*

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!

மிஷனெரிப் பணிக்காக மாலி அட்டிகான், போடோமசிகான், கும்பர் சாஹி, ஹரிஜன் சாஹி, கொடகமுடா, போட்டர்குடா சாஹி, கொடிங்கா, கோண்டாபுரி ஆகிய கிராமங்களுக்குச் சென்று நற்செய்தியைக் கூறி ஜெபித்து வந்தேன். பற்பல உபாதைகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஜெபித்ததன் மூலமாக கர்த்தர் அவர்களுக்கு நல்ல சுகத்தைக் கொடுத்தார். அவருக்கே மகிமை உண்டாவதாக! சகோ. பட்லா, போர்சுரா, ஹரிஹரன், சகோதரிகள் குமாரி, தமந்தி, போபானி ஆகியோர் மிக வாஞ்சையுடன் நற்செய்தியைக் கேட்டார்கள்.

ஞாயிறு ஆராதனை, சிறுவர் ஓய்வுநாள் பாடசாலை, வெள்ளிக்கிழமை உபவாசக் கூடுகை, தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. தற்போது விசுவாசிகள் இல்லங்களுக்குச் சென்று எழுத, படிக்கத் தெரியாதவர்களுக்கு தெஷியா, மிர்கான் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட வேதாகம புத்தகங்களை எப்படி வாசித்து புரிந்து கொள்வது என்பதை கற்றுக் கொடுக்கிறோம்.

வீட்டு ஜெபக்கூட்டம் கோண்டாபுரி, கொடிங்கா ஆகிய பணித்தளங்களில் நடத்தப்பட்டது. தேவ வார்த்தையைப் பகிர்ந்து கொண்டு, குடும்பத்தினரின் தேவைகளுக்காக ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டன. என் மிஷனெரிப் பணி மற்றும் என் குடும்பத்திற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

# ஒரு முக்கிய வேண்டுகோள்

## தேவை

★ கோவை IBT கட்டிடத்திலுள்ள Meeting Hall-இல் கூட்டங்கள் நடத்தப்படும் போது, சப்தம் வெளியே சென்று, அருகாமையிலுள்ள குடியிருப்புகளுக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படாவண்ணம் Meeting Hall-ற்கு Sound Proof System மற்றும் தகுந்த மாற்றங்கள் செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. ஆகவே, இப்பணிகளுக்கு ரூ. 4,50,000/- முதல் ரூ. 5,00,000/- வரை செலவு ஆகும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இத்தொகையை சந்திக்க தாங்குநர்கள் கிடைக்க ஜெபியுங்கள்.

★ திருச்சி மற்றும் சென்னையில் பணிபுரியும் முன்னேற்றப் பணியாளர்களுக்கு 2 இருசக்கர வாகனங்கள் தேவைப்படுகின்றன. தற்போதுள்ள பழைய வாகனங்களின் செலவு அதிகமாக வருவதால் புதிய வாகனங்கள் கொடுக்க வேண்டியுள்ளது. இதற்கு ஆகும் செலவு ரூ. 2,20,000/-. இதற்கு தாங்குநர்கள் கிடைக்க ஜெபியுங்கள்.

## கீழே கொடுக்கப்பட்டுள்ள புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு. வாசித்துப் பயனடையுங்கள்..!

| | | |
|---|---|---|
| 1. | வானத்தின் வாசல் | ரூ. 70/- |
| 2. | வானத்தின் மன்னா | ரூ. 70/- |
| 3. | பயப்படாதிருங்கள் | ரூ. 70/- |
| 4. | வேதாகமப் புத்தகங்களுக்கு ஓர் அறிமுகம் | ரூ. 60/- |
| 5. | உயிருள்ள உதாரணங்கள் | ரூ. 60/- |
| 6. | பாருக்குள் பரலோகம் | ரூ. 100/- |
| 7. | விவிலியப் பயணத்தின் விடிவெள்ளி | ரூ. 100/- |
| 8. | தேவ சத்தம் | ரூ. 100/- |
| 9. | Word of Life (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 10. | Word of Life (மலையாளம்) | ரூ. 100/- |
| 11. | Introduction to the Books of the Bible | ரூ. 70/- |
| 12. | Defeat the Despair (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 13. | Seeds for the Good Soil (ஆங்கிலம்) | ரூ. 120/- |
| 14. | சத்திய வார்த்தையின் முத்துக்கள் | ரூ. 120/- |
| 15. | இதய கீதங்கள் (பாடல் புத்தகம்) | ரூ. 60/- |

IBT வெளியிட்டுள்ள புத்தகங்களை தபால் மூலம் பெற விரும்புவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள் – செல் : 90470 57414. நேரிடையாக, எங்கள் முன்னேற்றப் பணியாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகங்கள் ஆவிக்குரிய வாழ்விற்கும், சமுதாய வாழ்வின் வெற்றிக்கும் மிகவும் பயனளிக்கக் கூடிய வகையில் Rev. Prof. S. பன்னீர் செல்வம் அவர்களால் எழுதப்பட்டவைகளாகும். ஆகவே, வாங்கிப் படித்துப் பயன்பெறுங்கள்!

Indian Bible Translators ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் கீழே குறிப்பிட்டுள்ள வங்கிகளின் மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ Scan** *செய்து கைபேசி மூலமாகவும்* உங்கள் காணிக்கையை எங்களுக்கு அனுப்பலாம்.

**1. STATE BANK OF INDIA**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 30008395600 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | 7231 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | SBIN0007231 |

**2. INDIAN BANK**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 475742259 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | S107 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | IDIB000S107 |

**SCAN & PAY**

Merchant Name : Indian Bible Translators
UPI ID : INDIANBIBLE@SBI

(அனுப்பப்பட்ட விபரத்தை IBT அலுவலகத்திற்கு உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். செல் : 90470 57414 இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)

## மிஷனெரி குழந்தைகளுக்குக் கல்வி நிதி

IBT இயக்கமானது ஒவ்வொரு ஆண்டும் நமது மிஷனெரிகளின் பிள்ளைகளுக்குக் கல்வி உதவித் தொகை வழங்கி வருகிறதை நீங்கள் அறிவீர்கள். 2025-26 ஆம் கல்வி ஆண்டிற்கு பிள்ளைகளின் படிப்பிற்காக உதவித் தொகை ரூ. 3 இலட்சம் தேவைப்படுகிறது. IBT பங்காளர்கள், சத்திய வார்த்தை வாசகர்கள் மற்றும் ஊழிய பாரம் கொண்ட அனைவரும் மனமுவந்து உற்சாகத்துடன் நிதி உதவி வழங்கி பிள்ளைகளின் படிப்பிற்கான செலவுகளைத் தாங்க முன் வாருங்கள்.

# துதியுங்கள்! ஜெபியுங்கள்!!

1. உத்தரப்பிரதேசம் பெல்த்ரா ரோடு பணித்தளத்தில் மிஷனெரியாக உற்சாகத்துடனும், ஆர்வத்துடனும் இடர்பாடுகளின் மத்தியிலும் சபை மக்கள் குறைந்து விடாதபடி வாஞ்சையுடன் செயல்படும் மிஷனெரி சகோ. சந்திரிகா தாஸ்-ற்காக கர்த்தரைத் துதிப்போம். கல்வி கற்காத மக்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு கல்வி கற்றுக் கொடுத்து, வேதாகமத்தை வாசிக்கும் திறன் பெறவும், புரிந்து கொண்டு கர்த்தருக்குள் வளரவும் வழிநடத்த, தேவன் அருள் புரிய ஜெபியுங்கள்.

2. கடந்த ஆண்டு சட்டீஸ்கார் மாநிலத்திலுள்ள கட்டல் பாரா என்ற பணித்தளத்தில் மிஷனெரியாகப் பணியமர்த்தப்பட்ட மிர்கான் மொழிபெயர்ப்பாளர் சகோ. ரூபன் மிர்கான் மிஷனெரிப் பணியை ஆர்வத்துடன் கற்று, மிகுந்த வாஞ்சையுடன் செய்வதோடு அலுவலகத்திற்கு அனுப்பும் அறிக்கைகளும் மிக நேர்த்தியான முறையில் செய்து வருவதற்காக கர்த்தரைத் துதியுங்கள். தற்போது இந்த மாதத்தில் ஊழியங்களுக்கும், ஊழியர்களுக்கும் பல தொல்லைகள், துன்பங்கள் நிகழ்ந்து வருவதை அறிகிறோம். கர்த்தர் எல்லாத் தீங்கிற்கும் விலக்கி காத்து, இந்த சகோதரன் பணியையும், இவர் குடும்பத்தையும் ஆசீர்வதித்து, தேவ நாமம் மகிமைப்பட ஊழியம் வளர ஜெபியுங்கள்.

3. ஒடிஷாவில் பணிபுரிந்து வரும் மிஷனெரிகள், விசுவாசிகளின் இல்லங்களுக்குச் சென்று IBT மூலமாக வெளியிடப்பட்ட வேதப் புத்தகங்களை வாசிக்க கற்றுக் கொடுத்து வருகிறார்கள். எழுத்தறிவு பணிகளையும் செய்து வருவதற்காக கர்த்தரைத் துதியுங்கள். வேதப் புத்தகங்களை வாங்கி படிக்க தெரியாதவர்கள், வாசிக்கும் திறனைக் கற்று சத்தியங்களை அறிந்து கொள்ளவும், இப்பணி மிக அத்தியாவசியமான பணியாகையால், மிஷனெரிகள் உற்சாகத்துடனும், ஜெபத்துடனும், இப்பணிகளைச் செய்ய ஆவியானவர் ஞானத்தைக் கொடுக்க ஜெபியுங்கள்.

4. திருச்சியிலுள்ள IBT முன்னேற்றப்பணியாளர் சகோ. பால்ஜெயசுதன் அவர்கள் மூலமாக IBT தாங்குநர்கள், பாப்பன்பள்ளி சிறுவர் இல்லத்திலுள்ள சிற்றாலயத்திற்கு 4 Fan-களும், பணித்தள ஆலயங்களுக்கு 16 Tube Light-களுக்கு Sponsor செய்ததற்காக கர்த்தரைத் துதியுங்கள். உதவிய தாங்குநர்கள், இதற்கு முயற்சி செய்த சகோதரன் ஆகியோரை கர்த்தர் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

5. ஒடிஷா, சந்தோஷ்ப்பூர் பணித்தளத்திலுள்ள IBT ஆலயம் பழுது பார்ப்பதற்காகும் செலவுத் தொகை ரூ. 87,500/-இல், IBT முன்னேற்றப் பணியாளர்கள் திரு. K. சுந்தர், திரு. பால் ஜெயசுதன், திரு. K. கிதியோன் இவர்களின் முயற்சியால் தாங்குநர்கள் மனமுவந்து, இதுவரை ரூ. 41,000/- கொடுத்துள்ளதற்காக கர்த்தரைத் துதியுங்கள். உதவி செய்த IBT தாங்குநர்கள் குடும்பத்தையும், இதற்காக முயற்சியெடுத்த இம்மூன்று முன்னேற்றப் பணியாளர்களையும் கர்த்தர் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.


**SEND ALL YOUR CONTRIBUTIONS**

**Cheques / DD / M.O. to**

**INDIAN BIBLE TRANSLATORS**

Civil Aerodrome Road, Coimbatore - 641 014.
Phone : 0422 - 4520143
WhatsApp & Mobile : 90470 57414
E-mail : indianbibletranslators@gmail.com
**Web : www.ibtword.com**


## சத்திய வார்த்தை

'சத்திய வார்த்தை' பத்திரிகைக்கு உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.
வருட சந்தா ரூபாய். 100/-

*சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :*

**WORD PUBLISHERS TRUST**
Civil Aerodrome Road, Coimbatore - 641 014.


Editor & Published by On behalf of: **Mr. K. JAISINGH**
**WORD PUBLISHERS TRUST**
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.

Printed by: **Mr. C.K. VENKATESH**
Chandra Prabha Press
113-118, V.H. Road, CBE-1.


## வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

சத்திய வார்த்தை பத்திரிகையின் சந்தாவைப் புதுப்பிக்காதிருந்தால் ரூ. 100/-ஐ மணியார்டர் மூலமாகவோ அல்லது கீழே குறிப்பிட்டுள்ள வங்கி மூலமாகவும், கீழேயுள்ள QR Code-ஐ SCAN செய்து, கைப்பேசி மூலமாகவும் உங்கள் காணிக்கைகளை எங்களுக்கு அனுப்பலாம். அனுப்பப்பட்ட விவரத்தை உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்.

**தொடர்பு எண். 90470 57414.**

BANK DETAILS

**CENTRAL BANK OF INDIA**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 1630413107 |
| Name | : | Word Publishers Trust |
| Branch | : | Kalapatti |
| IFS Code | : | CBIN0282057 |

**SCAN & PAY**

Address :
**WORD PUBLISHERS TRUST**
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.


**SATHTHIYA VAARTHAI - TAMIL**

Date of Publishing : 2nd & 3rd June 2025
Postal Regd. No. **CB/052/2024-26**
Licensed to Post without Prepayment No.
**TN/WR/CB/164/WPP/2024-2026 (Tamil)**

**RNI No. 82166**